# 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. **M.** நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 105/2022** நாள்: **18.09.2025** எ.ம.சா.**1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | **திவ்யா** | தொழில் : | உதவி மேலாளர், National Insurance Company Ltd. |
| த/பெ : | சந்திரசேகரன் | கிராமம் : | பொள்ளாச்சி |
| வயது : | 30 | தாலுகா : | பொள்ளாச்சி |
| | | மாவட்டம் : | **கோயம்புத்தூர்** |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

முதல் விசாரணை -

நான் இந்த மனுவில் 3வது எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

7 ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –

விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் லாரியான TN 59 B 5094 வாகனமானது எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறுதியறிக்கை 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்திற்கு காப்பீடு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் விபத்திற்கு பொறுப்பு என்பதால் 1 ம் எதிர்மனுதாரருக்காக எங்கள் நிறுவனம் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர்கள்

என்றால் சரியல்ல.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –

நான் வழக்கு கோப்புகளின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள மேற்படி லாரி தான் விபத்திற்கு காரணம் என்றும் அதனால் எங்கள் நிறுவனம் தான் மனுதாரருக்கு செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி லாரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்ததால் தான் வேன் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.